மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை, மொரிசியஸ் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் கைலேஷ் குமார் சிங் ஜகுத்பால் நேற்று (23.08.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மருத்துவக் கட்டமைப்புகள், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் நிர்வாக இயக்குநர் எம்.அரவிந்த், மொரிசியஸ் குடியரசு நாட்டின் உயர் ஆணையர் (இந்தியா) தில்லம், தலைமை நிர்வாக அலுவலர் செவ்ருட்டுன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விமானம் புறப்படும் நேரத்தில் தரையிறங்கிய மற்றொரு விமானம் விபத்து தவிர்ப்பு!

புதுடெல்லி, ஆக.24

புதுடெல்லி விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானத்திற்கும் புறப்படும் விமானத்திற்கும் ஒரே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டதால் பரபரப்பு நிலவியது.

விஸ்தாரா ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட அனுமதி வழங்கப்பட்ட அதே வேளையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து மற்றொரு விமானம் கிளம்ப தயாரானது. இது உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

இருவருக்கும் ஒரே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டதைய அறிந்த விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் விஸ்தாரா விமானத்தை புறப்படுவதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து தில்லிபாக் டோக்ரா விமானம் புறப்படுவது நிறுத்தப்பட்டவுடன் உடனடியாக ஓடுபாதையிலிருந்து பார்க்கிங் பேவுக்கு திரும்பியது.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் ஆலயங்களில் அர்ச்சகராகலாம் – என்று இந்தியாவின் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறதே?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; ஆலயங்களில் அர்ச்சகராக நியமனம் பெற சாதி தடையில்லை என்று சென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு தற்போது உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

உச்சநீதிமன்றம் தமது தீர்ப்பில், ஆகம விதிகளின்படி தேர்ச்சி பெற்றவர்களாக, முறையான பயிற்சி – பூஜை செய்வதற்கான தகுதி பெற்றவர்கள் யாரை வேண்டுமானாலும், எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமனம் செய்யலாம் எனத் தெளிவு படுத்தியுள்ளது.

இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தீர்க்க தரிசனத்தை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. அய்ந்தாவது முறை முதலமைச்சராக அரியணை ஏறிய கலைஞர், முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே, தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்றிடும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் அரசாணை வெளியிட்டார்; அமைச்சரவைத் தீர்மானத்தை தமது கைப்படவே மணிமணியாக எழுதி வழங்கினார்; என்பவை எக்காலத்திலும் அழியாத கல்வெட்டுச் சரித்திரம் !

கோவை, ஈச்சனாரி,

விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

கோவை, ஆக 24-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (23.08.2023) நடைபெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, கோனியம்மன் திருக்கோயில் மற்றும் கோட்டைமேடு, அகிலாண்டேசுவரி உடனுறை சங்கமேசுவரர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று அங்குள்ள திருத்தேர்கள் மற்றும் தேர் பாதுகாப்பு கொட்டகைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துக்களை

ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயிலுக்கு 19 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.1.04 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, கோவை, கோனியம்மன் திருக்கோயில் மற்றும் கோட்டைமேடு, அகிலாண்டேசுவரி உடனுறை சங்கமேசுவரர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று அங்குள்ள திருத்தேர்கள் மற்றும் பாதுகாப்பு கொட்டகைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் செ.தாமோதரன், கோவை மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், இணை ஆணையர் பெ.ரமேஷ், உதவி ஆணையர்கள் சி.கருணாநிதி, திருமதி ரா.விஜயலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவொற்றியூர் மேற்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

சிறப்புரை : திண்டுக்கல் ஐ.லியோனி! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு! வை. ம. அருள்தாசன் தலைமையில் நடைபெற்றது!

திருவொற்றியூர், ஆக. 24-

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழகத்தின் நவீன சிற்பி அய்யா கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் அஜாக்ஸ் பேருந்து பணிமனை அருகில் சிறப்பாக நடைபெற்றது.

ஆகஸ்ட் 16 , புதன்கிழமை மாலை 6 மணியளவில் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் , முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் நடைபெற்றது .

இந்த மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நல திட்டம் உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ் நாடு பாடநூல் கழகத்த லைவர் திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரையாற்றி கலைஞரின் புகழ்போற்றி கழகத்தலைவரின் திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புகளையும், சாதனைகளையும் எடுத்துரைத்தார்.

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., 1 வது மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு எம்.சி. ஆகியோர் பங்கேற்று பொது மக்களுக்கு தையல் இயந்திரம், மாற்றுத்திறனாளிகளுக்கு நிதிஉதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள் .

இந்த பொதுக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா. பா.மதிவாணன், மாவட்ட துணை செயலாளர் டி. ராமகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் எம். ஆனந்தன் ஆகியோரும் பகுதி கழக நிர்வாகிகள் துணை செயலாளர்கள் யு.எஸ். குறளரசன், இ. குமரவேல், ஏ.இந்துமதி, பொருளாளர் எம். வஜ்ஜிரவேல், வட்டச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் 4 வது வட்டம் கே. பவுல் 6 வது வட்டம் கி.கண்ணன்,

மாவட்ட பிரதிநிதிகள் எம். சந்திரகுமார், ஆர். மோகனசுந்தரம், ஜி.தினேஷ், ந. ராம்குமார் பொன். கோ. விஜயன் எஸ்.ஆர். மலைராஜ், எஸ்.கணேஷ் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர் டி.ஜி.ஆர். மணிவண்ணன், மகளிரணி அமைப்பாளர் எம். கோமளவள்ளி மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் தாமரை கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார் அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் ஏராளமான கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் என திரளானோர் பங்கேற்று சிறப்பித்தனர். மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் முன்னலை வகித்தனர்.

மாவட்ட கழக பிரதிநிதி ஆர் .தனிஷ்குமார் நன்றியுரையாற்றினார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.6366 கோடி நிலுவை!

காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.24-

கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், ஆறாயிரத்து 366 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்காமல், பாக்கி வைத்துள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்ட சமூக வலைதள பதிவில், கடந்த 2005 ஆம் ஆண்டு இதே நாளில், கோடிக்கணக்கான மக்களின் வேலை உரிமைத் திட்டமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை காங்கிரஸ் அரசு கொண்டுவந்ததை நினைவு கூர்ந்துள்ளார்.

மோடி ஆட்சியில் இத்திட்டத்திற்கான நிதி 33 சதவிகிதம் குறைக்கப்பட்டதுடன், 18 மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய ஆறாயிரத்து 366 கோடி நிதியை வழங்காமல் பாக்கி வைத்துள்ளதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத போக்கு தொடர்ந்தாலும், இத்திட்டத்தில் தற்போது பணியாற்றும் 14 கோடியே 42 லட்சம் மக்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் துணை நிற்கும் என்று மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பயனடைபவர்களில், பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில், கோடிக்கணக்கான மக்களை, ஊரக வேலை வாய்ப்பு திட்டம் பாதுகாத்ததாக மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

காக்களூரில் ரூ.78.50 லட்சம் மதிப்பில் சாலைப் பணிகள்

ஆயலூர் ஊராட்சியில் ரூ 10 லட்சம் மதிப்பில் புதிய மின் மாற்றிகள்!

ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஆக. 24:

திருவள்ளூர் ஒன்றியம், காக்களூரில் தமிழ்நாடு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 78.50 லட்சம் மதிப்பில் காக்களூர் காலனி பகுதியில் இருந்து அப்பாசாமி சாலை வரை புதிதாக சாலை அமைக்கும் பணி தொடக்க விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெய சீலி ஜெயபாலன் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு துணைத் தலைவர் எம்.பர்கத்துல்லா கான், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள்.

இந்த விழாவில் மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளரும் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை வகித்து சாலை அமைக்கும் பணியை ஜேசிபி எந்திரம் மூலம் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் ஒன்றியம், ஆயலூர் ஊராட்சியில் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இரு வெவ்வேறு இடங்களில் தலா ரூ.5லட்சம் வீதம் ரூ.10லட்சம் மதிப்பில் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு அவைகளை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இதில் பொதுகுழு உறுப்பினர் பொன்.விமல், ஒன்றிய கவுன்சிலர்கள் டி.கே.பூவண்ணன், வேதவல்லி சதீஷ், மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் டி.எம்.ராமச்சந்திரன், எஸ்.என்.குமார், எஸ்.சௌந்தர்ராஜன், அயலூர் வெங்கடேசன், லாசர், பிரபு, அப்புன்ராஜ், சிவப்பிரகாசம், சதீஷ், செந்தில்குமார், முருகன் கோவிந்தராஜ், கிறிஸ்டன், விக்கி, எட்டியப்பன், கார்த்தி, கமல், திராவிடதேவன், பாலாஜி , வெங்கடேசன், நாகேஷ், லட்சுமணன், பாஸ்கர், அரவிந்த், சாரங்கன், ஜெகதீசன், முருகேசன், துரைராஜ், ஜெயராமன், நாராயணமூர்த்தி, சந்திரசேகர், தேவகி, ஆனந்தி, கோகிலா, கௌரி உட்பட பலர் கலந்து கொண்டனர்கள்

நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

மதுரவாயல் 143வது வட்டக்கழகக் கூட்டம்!

வட்டச் செயலாளர் சி.சசிகுமார் அறிவிப்பு

சென்னை, ஆக.24,

மதுரவாயல் 143 வது வட்டக் கழகக் கூட்டம் இன்று (24.8.2023) மாலை 6 மணிக்கு நொளம்பூர் ஸ்ரீராம் நகர் வட்ட அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் மண்டலக்குழுத் தலைவரும் வடக்கு பகுதிச் செயலாளருமான நொளம்பூர் வே. ராஜன் பங்கேற்கிறார்.

கே.ஆறுமுகம், ஜி.மூர்த்தி,பி.தாட்சாயனி,பக்தவத்சலம்,டி.நாகரத்தினம், பி.சரவணன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுபோது வரும் 26 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட இருப்பதால், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள்,பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மகளிர் அணியினர், இளைஞர் அணி செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி143 வது வட்டச் செயலாளர் சி.சசிகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (24.08.2023 - வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி தலைமையில் நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் கழக அயலக அணி இணை. துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

2. கழக ஆக்கப் பணிகள்

எம்.எம்.அப்துல்லா எம்.பி
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில்

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிவிப்பு!

சென்னை ஆக.24-

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை 25.8.2023 மாலை 6:00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமை வகித்து ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்கள்,பகுதி அமைப்பாளர்கள்,பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:கலைஞர் நூற்றாண்டு விழா,கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகத்தில் 7 நாட்கள் மிதமான மழை

சென்னை, ஆக.24-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, 23.08.2023 முதல் 29.08.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக் கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழக தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகின்ற (5.9.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில், அண்ணா அறிவாலயத்தில், எனது தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாநில நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகத் தலைவர் அவர்கள் 19.8.2023 அன்று அறிவித்த வழிகாட்டுதலின் படி செயல்படுத்துதல் தொடர்பாகவும்,

மாவட்டம் தோறும் தொழிலாளர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாகவும்.

பி.டி.சி.ஜி.செல்வராஜ்
செயலாளர்
தி.மு.க.தொழிலாளர் அணி

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (23.08.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் பேரூர் ஆதீனம் தவத்திரு சாத்தலிங்க மருதாசல அடிகளார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கிணத்துகடவு சட்டமன்ற உறுப்பினர்செ.தாமோதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.